**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS.311/2023
(C/W OS. 270/2022)

பெயர் :ராதா ( DW1) (Cross )

த/க/பெ. :

தேதி :17.04.2026

ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

இவ்வழக்கின் வாதி என் சொத்தை கேட்டு வழக்கு போட்டுள்ளார். எங்கள் சொத்தில் இடையூறு செய்யக்கூடாது என்று நாங்கள் ஒரு வழக்கு போட்டுள்ளோம். திருவேங்கடம் என் உடன் பிறந்த சகோதரர். அவர் ராமர்பிள்ளை கிராமத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறார். நான் இருப்பது சீர்காழி வல்லபாய் படேல் தெரு. 2006 ல் எனக்கு திருமணம் ஆனது. 2 வது பிரதிவாதிக்கு திருமணம் ஆகி விருதாச்சலம் அருகே பென்னாடம் கிராமத்தில் வசிக்கிறார். அவர் என் மூத்த சகோதரி. என் திருமணத்திற்கு 2 ஆண்டுகளுக்கு முன்பு அவருக்கு திருமணம் ஆனது. என் பெற்றோர் இருவரும் இறந்துவிட்டார்கள். தந்தை 2005 லும் தாயார் 2015 லும் இறந்துவிட்டார். என் தாயார் சுப்புலெட்சுமியின் உடன் பிறந்த சகோதரர் வாதி. வாதி போட்டுள்ள ஆவணங்களை தெரிந்துக்கொள்ளவில்லை. வாதிக்கு என் பெற்றோர்கள் 23.05.2000 ல் வாதிக்கு எழுதிக் கொடுத்ததாக தாக்கல் செய்துள்ள உடன் படிக்ககையை நான் பார்த்துள்ளேன். அதில் யார் சாட்சிகளாக கையெழுத்து போட்டுள்ளார்கள் என்பதை தெரிந்துக் கொள்ளவில்லை. வழக்கு சொத்துக்கள் அனைத்தும் என் தந்தை நடராஜனின் சம்பாத்தியத்தை கொண்டு வாங்க பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்தை தவிர்த்து வேறு சொத்துக்கள் என் தந்தைக்கு உள்ளது என்றால் இருக்கலாம். 3 மா வயல், மனைக்கட்டு 1 உள்ளது. அது என் தம்பி திருவேங்கடம் வசத்தில் உள்ளது. பி.வா.சா.ஆ. 1, 2 ஆவணங்கள் என் தாய் தந்தை பெயரில் உள்ள கிரய ஆவணங்கள் சான்று ஆவணங்கள் என்றால் சரிதான். அசல் ஆவணங்கள் என்னிடம் தான் உள்ளது. அசல் ஆவணம் தாக்கல் செய்யாமல் நகல் தாக்கல் செய்ததற்கான காரணத்தை வழக்கில் சொல்ல வில்லை. பி.வா.சா.ஆ. 3 முதல் 5 வரை பெற்றோர் இறப்பு மற்றும் வாரிசு சான்று ஆவணம் என்றால் சரிதான்.

வழக்கு சொத்துக்கள் எங்கள் வசத்தில் இருப்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

**வாதி தரப்பு வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**